ISSN : 2349-1914

# நேடே இதழ்

## பன்னாட்டு ஆய்விதழ்

## International Journal

அக்டோபர் 2025 மலர் – 12 இதழ்–10

அக்டோபர்–2025 மலர்–12 இதழ்–10 ISSN : 2349 - 1914

# டுடே இதழ்

## (பன்னாட்டு ஆய்விதழ்)

## (TODAY ITHAZH-International Journal)

ஆசிரியர் – வெளியிடுபவர்

**ரெ.பாபு**

**TODAY PUBLICATION**

192, Bells Road, Chepauk,

Chennai-600 005

போன். : 044–28553797, செல்: 9840083738 Email: todaybabu@gmail.com, babu_today@yahoo.com

ISSN : 2349 - 1914

# பொருளடக்கம்

பக்கம்

1. வழிபாடும் வள்ளலாரும்
   – வெ. இராம்ராஜ் 5
2. "குட்டியாப்பா" – நாகூர்ரூமியின் படைப்புகளில் சிறுகதை
   – கா. நஸ்ரீன்பாத்திமா 10
3. வந்தவாசி வட்டாரத் தாலாட்டுப் பாடல்களில் மானிடவியல் கூறுகள்
   – தே. கலைவாணி 13
4. தாலாட்டு ஒப்பாரிப் பாடல்களில் உளவியல் கூறுகள்
   – ஆர். விஜயகுமாரி 16
5. கண்ணதாசன் குறுங்காவியத்தில் கவிதை கோட்பாடுகளில் ஆளுமைத் திறன்கள்
   – வ. புகழ் 20
6. திருவலம் வில்வநாதீசுவரர் கோயில் மவுனசுவாமிகளின் திருப்பணி
   – ஜெ. மீனாட்சி 24
7. தாய்மொழியும் கல்வியும்
   – கா. லதா 31
8. அறநெறிச்சாரம் – ஓர் பார்வை
   – ம. லோகநாயகி 35
9. நல்லம்மப் பாட்டு நிகழ்த்துகளில் தாய்த்தெய்வ வழிபாட்டு மரபுகள்
   – வே. இரவி 38
10. பரணரின் புறநானூற்றுப் பாடல்களில் வெளிப்படும் உவமைச் செய்திகள்
    – மு. ஜெகநாதன் 44
11. பெருமாள் முருகனின் கங்கணம் புதினத்தின் படைப்பாக்கநிலை
    – சி. இராம்குமார் 50
12. மலையாளி இன பழங்குடி மக்களின் வழிபாட்டு முறைகள்
    – சே. கமலக்கண்ணன் 53
13. நாலடியாரில் அரசியல் மேலாண்மை
    – கா. அழகுமலை & முனைவர் ம. பிரபாகரன் 62

ISSN : 2349 - 1914

14. பாலக்காடு மாவட்ட நிகழ்த்து கலையான பொறாட்டு நாடகமும் சிலப்பதிகாரமும்
- வீணா வெட்டுவிட்டா. அ. 66

15. அறிவு ஆராய்ச்சி இயலும், அப்பாலையியலும் (Epistemology & Metaphysics)
- க. இளங்கோ 70

16. தொல்காப்பிய உறழ்ச்சி விதிகளின் தற்கால நிலை
Present Status of Tholkappiyam Variable Rules
- முனைவர் இல. சுந்தரம் 74

17. சிந்தாமணியில் கிளைக்கதை அமைப்பில் தொன்மை
- செ. கார்த்திகா 78

18. புறநானூற்றில் ஔவையாரின் பாடல்களும் ஆளுமைத்திறனும்
- முனைவர் பெ. தேவி 86

19. செவ்வியல் இலக்கியம் - சிலப்பதிகாரம்
- ச. மதுரா 92

20. பண்டைத் தமிழகமும் தொண்டை மண்டலமும்
- முனைவர் க.அ. அன்னையப்பன் 98

21. ஆற்றல் பன்முகப் பார்வை
- அ. ரேவதி 102

22. ஆண்டாள் பாசுரங்களில் தனித்தன்மைகள்
- சு. பத்மா & முனைவர் பு. துர்காதேவி 107

23. கவிஞர் கண்ணதாசன் திரையிசைப்பாடல்களில் சிற்றிலக்கியக்கூறுகள்
- பா. கௌசல்யா தேவி & முனைவர் பு. துர்காதேவி 111

ISSN : 2349 - 1914

# ஆண்டாள் பாசுரங்களில் தனித்தன்மைகள்

க. பத்மா
பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முனைவர் ப. துர்காதேவி
உதவிப்பேராசிரியர் & நெறியாளர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை-600117.

ஆழ்வார்கள் வரிசையில் ஒரே ஒரு பெண்ணாக தனிச்சிறப்பு பெறுபவர் ஆண்டாள். வைணவ அடியார்களுள் ஆண்டாள் மகளிர் மத்தியில் வைணவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முனைந்தார். பாவை நோன்பினை அதற்குத் துணையாகக் கொண்டு திருப்பாவை, நாச்சியார் திருமொழி எனும் பக்தி இலக்கியத்தைப் படைத்தார். அரங்கன் ஆலயங்களில் ஆண்டாளுக்குத் தனிச்சந்நிதி அமைந்திருப்பதும் ஸ்ரீவில்லிபுத்தூரில் ஆண்டாளுக்கென்று தனிக்கோயில் அமைந்திருப்பதும் அவரது தனித்தன்மையை உணர்த்துகின்றது. ஆண்டாளின் திருப்பாவை, நாச்சியார் திருமொழி பாசுரங்கள் எவ்வகையில் தனித்தன்மையுடன் திகழ்கின்றன என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திருப்பாவை

நாலாயிரத் திவ்வியப்பிரபந்தத்தில் முதலாயிரத்தில் இடம்பெறும் பேறுபெற்றது கோதையின் திருப்பாவையாகும். கி.பி. 6 ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் பௌத்தம், சமணம், சைவம், வைணவம் எனச் சமயங்கள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டு தங்கள் மதக் கொள்கைகளை நிலைநாட்ட முற்பட்டன. தங்கள் சமயக் கொள்கைகளை உலகுக்கு உணர்த்தும் நோக்கில் பக்தி இலக்கியங்கள் படைக்கப்பட்டன. இக்காலத்தில் மழையை வேண்டுவதும் நல்ல கணவன் தங்களுக்கு வாய்க்க வேண்டுவதும் திருப்பாவையின் நோக்கமாகக் கொண்டாலும் வரலாற்றைப் பின்னணியாகக் கொண்டு சிந்திக்கும் போது பெண்கள் மத்தியில் வைணவ சமயக் கோட்பாட்டை வலியுறுத்தி விழிப்புணர்வு கொள்ளச் செய்வதே ஆண்டாளின் நோக்கமாகும். அரங்கனாம் ஆண்டவனையே கணவனாகப் பெற்று வளர்த்த தந்தையான பெரியாழ்வாரே வணங்கத்தகும் பெரும்பேறு பெற்றவர் ஆண்டாள் ஒருவரே. ஆசாரியருள் ஸ்ரீ மணவாளமாமுனிகள் 'ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையள் ஆண்டாளைப் போற்றுகிறார். தூய திருமகளாய் வந்து அரங்கனார்க்குத் துழாய்மாலை முடி சூடிக் கொடுத்த மாது? என்று வேதாந்த தேசிகரும் ஆண்டாளை சிறப்பிக்கின்றார்.

திருப்பாவையின் முப்பது பாசுரங்களும் ஆய்வுத்தளத்தினைக் கொண்ட கொச்சகக் கலிப்பாவால் இயற்றப் பெற்றவை. கண்ணனைத் தன் மணாளனாகக் கொள்ளுதற்கு ஏற்ற ஆண்டாளின் ஆயத்தங்களை வெளியிடும் நூல் ஆகும். இறைவனை அடைந்து பணிபுரியும் பேரின்பத்தைப் பெற விழையும் ஓர் ஆன்மா இறைவனின் திருப்பெயர்களைப் பலவாகப் பாடி தன் உள்ளத்தை இறைவனுக்கு அறிவிக்குமாறு செய்து, அவனுக்கும் தனக்கும் இடையே உள்ள அழிக்க இயலா உறவை எடுத்துக் காட்டி, வேறு எதனையும் விரும்பாமல்,

"உன்தன்னோடு உற்றோமே யாவோம்
உனக்கே நாம் ஆட்செய்வோம்"

என்று எடுத்துரைப்பதும், தான் விரும்பிய உறுதிப் பொருளைப் பெறுவதை உள்ளீடாகக் கொண்டதுமே திருப்பாவை ஆகும்.

## நாச்சியார் திருமொழி

நாச்சியார் திருமொழி பதினான்கு பத்துக்களாகப் பிரிந்துள்ள நாச்சியார் திருமொழியில் 5 பத்துகள் (1,3, 12, 13, 14) அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தால் அமைந்துள்ளன. எஞ்சியவற்றில் ஆறு

ISSN : 2349 - 1914

[illegible] (2, 4, 6, 7, 8, 9) கலிவிருத்தத்தால் [illegible] ஐந்தாம் திருமொழி, எழுசீர்க் [illegible] ஆசிரிய விருத்தத்தாலும், பத்தாம் திருமொழி கலிநிலைத் துறையாலும், [illegible]ன்றாம் திருமொழி கொச்சகக் கலிப்பாவாலும் அமைந்தவை.

ஆண்டாள் தன் திருமணத்தைப் பற்றிக் காணும் கனவுகளையும், கற்பனைச் செய்திகளையும் வெளியிடும் முறையில் அமைந்து ஆண்டாளின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் எண்ணங்களின் தொகுப்பே நாச்சியார் திருமொழியாகும். இறைவன் ஆண்டாளுக்கு அருள் செய்யாது காலம் தாழ்த்தவே, தன் குறிக்கோளை நிறைவேற்ற ஒத்துழைக்குமாறு, ஆண்டாள் காமவேளை வேண்டுவதாக இப்பகுதி தொடர்கிறது. தலைவனின் பிரிவால் தலைவி அடையும் துன்பங்கள் அனைத்தும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. தன் முயற்சிகள் அனைத்தும் தோற்றநிலையில் தலைவன் இருப்பிடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு வேண்டியும் அவ்வாறு இயலாது எனில் அவன் தொடர்புற்ற பொருள்களையேனும் கொணருமாறு கூறியும், இறுதி நிலையில் திருமாலின் இருப்பைப் பிறர் வாயிலாக வெளிப்படுத்தியும் அமைந்துள்ளது.

## சிற்றின்பக் காதல்

ஆண்டாளின் படைப்பான நாச்சியார் திருமொழியில் உடல் பூர்வமான காதல் தெய்வீகக் காதலாக உருமாற்றம் பெறுகிறது. கண்ணனை மணக்க வேண்டும் என்னும் கோதையின் ஆசை புதிய முறையில் காதல் உணர்வின் உச்சநிலையாக வெளிப்படுகிறது 'சிற்றின்பம் சார்ந்த உள்ள உணர்ச்சி, தெய்வீகக் காதலாக மாறி பேரின்பக்காதல் நிலைக்கு விஞ்சி நிற்கிறது. ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாத நிலையில் அவனைத் தன் இறைவனின் உடைமையாக ஆக்குவது மட்டுமின்றி தான் இறைவனின் உடைமை ஆவதற்கும் ஆசைப்படுவது இத்தன்மைதயாகும். தன்னுடைய உடலையும் ஆன்மாவையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதாகும். இங்குச் சிற்றின்பக்காதல் ஆன்மீக அனுபவ நிலைக்கு ஏற்றம்பெறுவதைக் காணமுடிகிறது.

## ஒருதலைக் காதல்

நாயகன் நாயகி பாவனையில் காணப்படும் ஆண்டாள் பாசுரங்களில் மனித ஆன்மா நாயகியாகவும், இறைவன் நாயகனாகவும் உருவகம் செய்யப்பட்டிருந்தாலும் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழியில் நாயகியான ஆன்மாவின் ஏக்க உணர்வுகளே வெளிப்படுத்தப்படுகின்றன. நாயகனின் ஏக்க உணர்வுகள் வெளிப்படுத்தப்படவில்லை. எனவே இந்தக் காதல் ஒருதலைக் காதலான கைக்கிளையாக அமைகின்றது. ஆன்மாவின் காதல் நிலைக்கு இணையாக கடவுளின் காதல் சிறப்பிக்கப்படுகிறது.

## இறைவனின் காதலி

தமிழ்ப் பண்பாட்டில் பெண்டிர் தம் காதல் உணர்ச்சிகளை வெளிப்படையாக விவரிப்பது இல்லை.

**"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான"[2]**

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் பெண்கள் மடலேறும் வழக்கம் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. இதனைத் திருவள்ளுவரும்.

**"கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்"[3]**

என்ற குறளில் வலியுறுத்துகிறார். ஆண்டாள் நாச்சியாரோ தாம் ஒரு பெண் என்ற உணர்வுக்கு ஆட்படாதவராகக் காதல் உணர்ச்சியை வெள்ளமாகக் கரைபுரண்டோடச் செய்துள்ளார். சமயக்குரவர்கள் எல்லோரும் தங்களை நாயகிகளாகவும் இறைவனைத் தங்களுக்கு நாயகனாகவும் ஏறிட்டு பாடிப் போற்றினர். ஆயினும் அவர்கள் கொண்ட நாயக–நாயகி பாவனை இயல்பானதல்ல ஆதலின் மேட்டுமடை நீர் போன்றது. பெண்ணாய்ப் பிறந்து அழகிய மணவாளனையே தம் நாயகனாகக் கருதி இவர் உள்ளுருகிச் செலுத்தும் காதல் வெள்ளம் பள்ளமடை நீர் போன்றது.

## துன்பவியல் உணர்வுகள்

துன்பியல் நாடகம் இரக்கம், அச்சம் ஆகிய உணர்ச்சிகளோடு அவற்றுக்குத் தொடர்பான

திருமொழிகள் (2, 4, 6, 7, 8, 9) கலிவிருத்தத்தால் அமைந்தவை. ஐந்தாம் திருமொழி, எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தாலும், பத்தாம் திருமொழி கலிநிலைத் துறையாலும், பதினொன்றாம் திருமொழி கொச்சகக் கலிப்பாவாலும் அமைந்தவை.

ஆண்டாள் தன் திருமணத்தைப் பற்றிக் காணும் கனவுகளையும், கற்பனைச் செய்திகளையும் வெளியிடும் முறையில் அமைந்து ஆண்டாளின் விருப்பத்தைப் பிரதிபலிக்கும் எண்ணங்களின் தொகுப்பே நாச்சியார் திருமொழியாகும். இறைவன் ஆண்டாளுக்கு அருள் செய்யாது காலம் தாழ்த்தவே, தன் குறிக்கோளை நிறைவேற்ற ஒத்துழைக்குமாறு, ஆண்டாள் காமவேளை வேண்டுவதாக இப்பகுதி தொடர்கிறது. தலைவனின் பிரிவால் தலைவி அடையும் துன்பங்கள் அனைத்தும் இப்பகுதியில் கூறப்பட்டுள்ளன. தன் முயற்சிகள் அனைத்தும் தோற்றநிலையில் தலைவன் இருப்பிடத்திற்குத் தன்னை அழைத்துச் செல்லுமாறு வேண்டியும் அவ்வாறு இயலாது எனில் அவன் தொடர்புற்ற பொருள்களையேனும் கொணருமாறு கூறியும், இறுதி நிலையில் திருமாலின் இருப்பைப் பிறர் வாயிலாக வெளிப்படுத்தியும் அமைந்துள்ளது.

**சிற்றின்பக் காதல்**

ஆண்டாளின் படைப்பான நாச்சியார் திருமொழியில் உடல் பூர்வமான காதல் தெய்வீகக் காதலாக உருமாற்றம் பெறுகிறது. கண்ணனை மணக்க வேண்டும் என்னும் கோதையின் ஆசை புதிய முறையில் காதல் உணர்வின் உச்சநிலையாக வெளிப்படுகிறது 'சிற்றின்பம் சார்ந்த உள்ள உணர்ச்சி, தெய்வீகக் காதலாக மாறி பேரின்பக்காதல் நிலைக்கு விஞ்சி நிற்கிறது. ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாத நிலையில் அவனைத் தன் இறைவனின் உடைமையாக ஆக்குவது மட்டுமின்றி தான் இறைவனின் உடைமை ஆவதற்கும் ஆசைப்படுவது இத்தன்மையதாகும். தன்னுடைய உடலையும் ஆன்மாவையும் இறைவனுக்கு அர்ப்பணிப்பதாகும். இங்குச் சிற்றின்பக்காதல் ஆன்மீக அனுபவ நிலைக்கு ஏற்றம்பெறுவதைக் காணமுடிகிறது.

**ஒருதலைக் காதல்**

நாயகன் நாயகி பாவனையில் காணப்படும் ஆண்டாள் பாசுரங்களில் மனித ஆன்மா நாயகியாகவும், இறைவன் நாயகனாகவும் உருவகம் செய்யப்பட்டிருந்தாலும் திருப்பாவை மற்றும் நாச்சியார் திருமொழியில் நாயகியான ஆன்மாவின் ஏக்க உணர்வுகளே வெளிப்படுத்தப்படுகின்றன. நாயகனின் ஏக்க உணர்வுகள் வெளிப்படுத்தப்படவில்லை. எனவே இந்தக் காதல் ஒருதலைக் காதலான கைக்கிளையாக அமைகின்றது. ஆன்மாவின் காதல் நிலைக்கு இணையாக கடவுளின் காதல் சிறப்பிக்கப்படுகிறது.

**இறைவனின் காதலி**

தமிழ்ப் பண்பாட்டில் பெண்டிர் தம் காதல் உணர்ச்சிகளை வெளிப்படையாக விவரிப்பது இல்லை.

**"எத்திணை மருங்கினும் மகடூஉ மடன்மேல்**
**பொற்புடை நெறிமை இன்மையான"[2]**

என்னும் தொல்காப்பிய நூற்பாவில் பெண்கள் மடலேறும் வழக்கம் இல்லை எனக் கூறப்பட்டுள்ளது. இதனைத் திருவள்ளுவரும்.

**"கடலன்ன காமம் உழந்தும் மடல்ஏறாப்**
**பெண்ணின் பெருந்தக்கது இல்"[3]**

என்ற குறளில் வலியுறுத்துகிறார். ஆண்டாள் நாச்சியாரோ தாம் ஒரு பெண் என்ற உணர்வுக்கு ஆட்படாதவராகக் காதல் உணர்ச்சியை வெள்ளமாகக் கரைபுரண்டோடச் செய்துள்ளார். சமயக்குரவர்கள் எல்லோரும் தங்களை நாயகிகளாகவும் இறைவனைத் தங்களுக்கு நாயகனாகவும் ஏறிட்டு பாடிப் போற்றினர். ஆயினும் அவர்கள் கொண்ட நாயக-நாயகி பாவனை இயல்பானதல்ல ஆதலின் மேட்டுமடை நீர் போன்றது. பெண்ணாய்ப் பிறந்து அழகிய மணவாளனையே தம் நாயகனாகக் கருதி இவர் உள்ளுருகிச் செலுத்தும் காதல் வெள்ளம் பள்ளமடை நீர் போன்றது.

**துன்பவியல் உணர்வுகள்**

துன்பியல் நாடகம் இரக்கம், அச்சம் ஆகிய உணர்ச்சிகளோடு அவற்றுக்குத் தொடர்பான

அவற்றைச் சுவையுடையனவாக ஆக்குகின்றது' என்று அரிஸ்டாட்டில் குறிப்பிடுகிறார். ஆண்டாள் பாடல்களில் தலைவனால் பட்ட துன்பவியல் உணர்வுகள் மட்டுமே வெளிப்படுத்தப்படுகின்றன. தலைவன் பிரிவால் வருந்தும் நிலையை

**"எழிலுடைய அம்மனைமீர் என் அரங்கத்து இன்னமுதர்**
**குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்**
**எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய**
**கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே"[4]**

எனப் பாடிப் புலம்புகிறாள்.

**புராண நிகழ்வுகள்**

திருப்பாவையில் திருமாலின் அவதாரப் பெருமைகளைக் கூறும் கதைகளை மிகுதியாகக் காண்கிறோம். திருமாலின் பத்து அவதாரங்களில் பூரண அவதாரமாகப் பேசப்படும் கண்ணன் மற்றும் இராம அவதாரங்களே சிறப்பாகக் கூறப்படுகின்றன. கண்ணனை அழிக்க கம்சன் பலமுறை முயன்றதையும் அவன் முயற்சிகளையெல்லாம் கண்ணன் வெற்றி பெறாமல் செய்ததையும் பல இடங்களில் ஆண்டாள் குறிப்பிடுகிறார். கம்சனால் ஏவப்பட்ட பூதனை எனும் அரக்கி அழகிய பெண்ணுரு தாங்கி ஆயர்பாடியில் தூங்கிக் கொண்டிருந்த கண்ணனை எடுத்து பால் கொடுத்து கொல்ல முயன்ற போது கண்ணன் அவ்வரக்கியைக் கொன்ற நிகழ்வினைப்

**"பேய்முலை நஞ்சுண்டு"[5]**

என்ற தொடரில் உணர்த்துகிறார். அடுத்து நந்தகோபன் மாளிகையில் ஒரு வண்டியின் கீழ்ப்புறத்தில் தொட்டிலில் துயிலும் கண்ணனைக் கம்சனால் ஏவப்பட்ட சகடாசுரன் எனும் அரக்கன் சக்கர வடிவில் வந்து கொல்ல முயலும்போது கண்ணன் பாலுக்குப் பசித்தழுவது போல தம் சிறிய திருவடிகளை மேல்நோக்கி உதைக்க சகடவடிவில் வந்த அசுரன் அழிந்த சம்பவத்தைக்

**"கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி"[6]**
**"பொன்றச் சகடம் உதைத்தாய்"[7]**

என்று குறிக்கிறார்.

குதிரை வடிவில் கண்ணனைக் கொல்ல வந்த கேசி எனும் அரக்கனை அழித்த செயல்,

**"மாவாய் பிளந்தானை"[8]**

என்றும், சாணூரன், முட்டிகன் ஆகிய மல்லர்கள் கண்ணனால் அழிந்த செயல்

**"மல்லரை மாட்டிய தேவாதிதேவனை" 9**

என்றும் குறிக்கப்படுகிறது.

கம்சனது பட்டத்துயானையான குவலயா பீடத்தைக் கொன்ற செயலை

**"வல்லானைக் கொன்றானை"[10]**

என்று குறிக்கிறார்.

கன்றின் வடிவம் தாங்கி கொல்ல வந்தான் வத்சாசுரன், அக்கன்றையே எறிதடியாகக் கொண்டு கபித்தாசுரன் எனும் அசுரன் மீது எறிந்து அவனையும் அழித்ததைக்

**"கன்று குனிலா எறிந்தாய்"[11]**

என்று உணர்த்துகிறார்.

இந்திரன் ஏவலால் கடும் மழை பெய்தபோது கோவர்த்தனகிரியையே குடையாகப் பிடித்து ஆயர்மார்களைக் காப்பாற்றியருளிய செயலைக்

**"குன்று குடையா எடுத்தாய்"[12]**

என்ற தொடர் உணர்த்துகிறது. இவற்றைப் போலவே இராம அவதாரச் சிறப்பும் வாமன அவதாரச் சிறப்பும் கூறப்படுகின்றன. இராமாவதாரச் சிறப்பு

**"சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை"[13]**

**"சென்றங்கு தென்னிலங்கை செற்றாய்"[14]**

என்றும்

**"கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்" [15]**

என்றும் குறிக்கப்படுகிறது. வாமன அவதாரச் சிறப்பு

**"ஓங்கி உலகளந்த உத்தமன்"[16]**
**"அன்று இவ்வுலகம் அளந்தாய்"[17]**

என்றெல்லாம் போற்றப்படுகிறது. இவ்வாறு திருமாலின் அவதாரச் சிறப்பை உணர்த்தும்

ISSN : 2349 - 1914

புராணக் கதைகளை திருப்பாவையில் காண முடிகிறது. இச்சிறப்பு ஆண்டாளின் தனித்தன்மையாகத் திகழ்கிறது எனலாம்.

**நூற்பயன் கூறல்**

பக்தி இலக்கியங்களைப் படைத்தவர்கள் தம் சமய நிலைக்கேற்ப தமது நூல்களில் நூல்களின் பயனைக் கூறியுள்ளனர். சேக்கிழார் பெரியபுராணத்தில்

**"இங்கு இதன் நாமம் கூறின் இவ்வுலகத்து முன்னாள்**
**தங்கு இருள் இரண்டில் மாக்கள் சிந்தையுள் சார்ந்து நின்ற**
**பொங்கிய இருளை ஏனைப் புறஇருள் போக்குகின்ற**
**செங்கதிரோன் போல்நீக்கும் திருத்தொண்டர் புராணம் என்பாம்"**[18]

என்று நூற்பயன் குறிப்பிடுகிறார். இப்புராணத்தின் திருப்பெயரைச் சொன்னால் ஆதிகாலந்தொட்டு இங்குள்ள இருவேறு இருள்களும் புறஇருளைப் போக்குகின்ற செங்கதிர்களைக் கொண்ட கதிரவன் போல மாக்களின் உயிர்களிடத்தே மண்டிக் கிடக்கும் அக இருளான ஆணவத்தைப் போக்கும் என்கிறார். ஆண்டாளும் தன் பாசுரங்களில் தன் நூல்களைப் படிப்பவர் பெறும் பயனைக் கூறியுள்ளார். சான்றாகத் திருப்பாவையின் இறுதிப் பாசுரத்தில் திருப்பாவையை ஓதுபவர்கள் நாராயணனாலே எல்லா இடத்திலும் திருவருள் பெற்று இன்புறவர் என்று குறிப்பிடுவதைக் காணலாம்.

**"... பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன**
**சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே**
**இங்கிப் பரிசுரைப்பா ரீரண்டு மால்வரைத்தோள்**
**செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்**
**எங்குத் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்."**[19]

இப்பாடல் அடியவர்கள் திருமாலிடம் பெறும் பயன் திருவருள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இத்திருவருளில் இவ்வுலகிற்குத் தேவையான திருவும் அவ்வுலகிற்கு இன்றியமையாத அருளும் அடங்கியிருத்தலைக் காணலாம். திருப்பாவையைத் தப்பாது ஓதுபவர்கள் எங்கிருந்தாலும் கருணையுள்ளமும். செல்வமிகுதியுமுடைய திருமாலிடமிருந்து திருவையும் அருளையும் பெற்று இன்புறுவர் என்று கூறப்பட்டுள்ளது. நாச்சியார் திருமொழியிலும் ஒவ்வொரு திருமொழியின் இறுதியிலும் நூற்பயன் கூறப்பட்டுள்ளது. சான்றாக முதல் திருமொழியின் இறுதியில்

**"...பொருப்பன்ன மாடம் பொலிந்து தோன்றும்**
**புதுவையர் கோன்விட்டு சித்தன்கோதை**
**விருப்புடை இன்தமிழ் மாலைவல்லார்**
**விண்ணவர் கோனடி நண்ணுவரே"**[20]

ஆண்டாளின் திருப்பாவை, நாச்சியார் திருமொழி பாசுரங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன என்பதை தரவுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. ஆண்டாள், திருப்பாவை. பா. 29
2. தொல்பொருள், நூ. 38
3. திருக்குறள், கு.எ. 1137
4. ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா. 608
5. ஆண்டாள், திருப்பாவை. பா. 6
6. மேலது, பா.6
7. மேலது, ப. 24
8. மேலது. பா. 8
9. மேலது. பா. 8
10. மேலது. பா. 15
11. மேலது, பா. 24
12. மேலது. பா. 24
13. மேலது. பா. 12
14. மேலது. பா. 24
15. மேலது, பா. 10
16. மேலது, பா. 3
17. மேலது. பா. 24
18. சேக்கிழார், பெரியபுராணம், பாயிரம் நூற்பெயர்ச்செய்யுள்
19. ஆண்டாள், திருப்பாவை, பா. 30
20. ஆண்டாள், நாச்சியார் திருமொழி, பா. 513

❖ ❖ ❖